Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 23.05.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 23.05.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதில், நாட்டின் இளைஞர்கள் முக்கிய பங்காற்றுவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள சைப்ரஸ் அதிபர் திரு. நிக்கோஸ் கிறிஸ்டோ டூடிலஸ் இன்று, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்துப் பேசினார்.

ரிசர்வ் வங்கி, உபரி வருவாய் தொகையாக 2.86 லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசுக்கு வழங்க உள்ளது.

புதுச்சேரியில், 76ஆவது ஜூனியர் தேசிய கூடைப் பந்து சாம்பியன்ஷிப் போட்டியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, தமிழக அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

***மோடி -1 (18)***

தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதில், நாட்டின் இளைஞர்கள் முக்கிய பங்காற்றுவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் இன்று, 19ஆவது வேலைவாய்ப்பு முகாமை துவக்கி வைத்து காணொளிக் காட்சி மூலம் உரையாற்றிய அவர், இவ்வாறு தெரிவித்தார். நிகழ்ச்சியில், அவர், 51 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மத்திய அரசு சார்பில் நடத்தப்படும் இந்த வேலை வாய்ப்பு முகாமில், ரயில்வே, வங்கித்துறை, பாதுகாப்புத்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில், இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை அவர் வழங்கினார். இதன் மூலம், இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதில், மத்திய அரசு அளித்துவரும் முன்னுரிமையை எடுத்துக் கூறுவதாக அவர் தெரிவித்தார்.

2047ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கான உறுதிப்பாட்டுடன் ஒவ்வொரு இந்தியரும் செயல்பட்டு வருவதாகவும், அதனை அடைய நாடு பல துறைகளில் முதலீடு செய்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள் IGOD கர்மயோகி இணையதளத்தை, அதிகம் பயன்படுத்திக் கொள்ளுமாறு பிரதமர் கேட்டுக் கொண்டார். இது அவர்களின் பொறுப்புகளை எளிதாக புரிந்து கொள்ள உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

***மோடி - 2 (9)***

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நாட்டின் முன்னேற்றத்தில் பங்களிப்பார்கள் என்றும், வளர்ந்த இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்கு அவர்களின் தேவை அதிகம் இருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 47 இடங்களில் நடத்தப்பட்ட இந்த வேலைவாய்ப்பு முகாமின் ஒருபகுதியாக, சென்னை ICF வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பங்கேற்றார். மேலும் ஒரே ஆண்டில் 12 லட்சம் பேருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வேலைவாய்ப்பை வழங்கி இருப்பதாக அவர் தெரிவித்தார். இது குறித்து மேலும் அவர் கூறுகையில்...

(வாய்ஸ்)

***மோடி - 3 (13)***

(வாய்ஸ்)

மத்திய அரசின் மக்கள் நலன் சார்ந்த வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார். பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் ரயில் பெட்டிகள் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார். வந்தே பாரத் ரயில் பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுவதற்கு, பாராட்டு தெரிவித்த அவர், மும்பை, அஹமதாபாத், சென்னை, பெங்களூரு

மற்றும் ஹைதராபாத் வழித்தடங்களில், புல்லட் ரயில் சேவைகள் விரைவில் தொடங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், உள்கட்டமைப்பு, மின்னணு மயம், வர்த்தகம், வேலைவாய்ப்பு போன்றவை விரைவாக வளர்ச்சி அடைந்து வருவதாக அவர் தெரிவித்தார். பிரதம மந்திரி கிஸான் திட்டத்தின் கீழ் 11 கோடி விவசாயிகள் பயனடைந்து வருவதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

*முர்மு (17)*

இந்தியா வந்துள்ள சைப்ரஸ் அதிபர் திரு. நிக்கோஸ் கிறிஸ்டோ டூடிலஸ் இன்று, குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்துப் பேசினார். பின்னர் இருதரப்பு நல்லுறவு குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். நிகழ்ச்சியில், குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மற்றும் மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, செமிகண்டக்டர்கள், விண்வெளி மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்து வரும் துறைகளில், இந்தியாவிற்கும் – சைப்ரசிற்கும் இடையே ஒத்துழைப்பிற்கு மிகப் பெரிய சாத்தியக் கூறுகள் உள்ளன என்று கூறினார்.

மேலும் எல்லைத் தாண்டிய பயங்கரவாதம், மற்றும் பலதரப்பு அமைப்புகளின் சீர்திருத்தம் போன்ற முக்கியமான பிரச்சனைகளில் சைப்ரஸ் வழங்கும் ஆதரவையும் அவர் பாராட்டினார். சைப்ரஸின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு இந்தியாவின் அசைக்க முடியாத ஆதரவை குடியரசுத் தலைவர் மீண்டும் வலியுறுத்தினார். தொடர்ந்து பேசிய சைப்ரஸ் அதிபர், இந்தியா – சைப்ரஸ் இடையேயான நல்லுறவு, நட்புறவு பல நூற்றாண்டுகளை கடந்தது என்று குறிப்பிட்டார்.

***பத்ம விருதுகள் (19)***

நாட்டின் உயரிய விருதுகளான பத்ம விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி, புதுடெல்லியில் நாளை மறுதினம் நடைபெற உள்ளது. இந்த ஆண்டிற்கான பத்ம விருதுகள் குடியரசுத் தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி, 5 பத்ம விபூஷன், 13 பத்ம பூஷன் மற்றும் 113 பத்ம ஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டன. பத்ம விபூஷன் விருது மறைந்த ஹிந்தி நடிகர் தர்மேந்திரா, மறைந்த கேரள முன்னாள் முதலமைச்சர் அச்சுதானந்தன், உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி K.T. தாமஸ் உள்ளிட்ட 5 பேருக்கு அறிவிக்கப்பட்டது.

பத்ம பூஷன் விருது மறைந்த ஜார்க்கண்ட் முன்னாள் முதலமைச்சர் சிபு சோரன், நடிகர் மம்முட்டி, பிரபல டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ், தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் K.R. பழனிசாமி, ஈரோட்டைச்

சேர்ந்த சமூக சேவகர் S.K.M. மயிலானந்தன் உள்ளிட்டோருக்கு அறிவிக்கப்பட்டது. இதேபோல் நடிகர் மாதவன், கிரிக்கெட் வீரர் ரோஹித் சர்மா, எழுத்தாளர் சிவசங்கரி, சென்னை ஐஐடி இயக்குநர் காமகோடி உள்ளிட்டோருக்கு பத்ம ஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், பத்மவிருதுகள் வழங்கும் விழா, வருகின்ற 25ஆம் தேதி நடைபெற உள்ளது. குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு பங்கேற்று, பத்ம விருதுகளை வழங்க உள்ளார்.

***ரிசர்வ் வங்கி (14)***

ரிசர்வ் வங்கி, உபரி வருவாய் தொகையாக 2.86 லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசுக்கு வழங்க உள்ளது. மத்திய அரசுக்கு கடந்த 2024-2025ஆம் நிதியாண்டில் ரிசர்வ் வங்கி 2.69 லட்சம் கோடி ரூபாயை உபரி வருவாய்த் தொகையாக வழங்கியது. நெருக்கடி நேரத்தில், மத்திய அரசின் நிதி நிலைமையை வலுப்படுத்த ரிசர்வ வங்கி, இந்த உபரி வருவாயை வழங்கி வருகிறது. தற்போது மேற்காசிய விவகாரத்தில் கச்சா எண்ணெய் விநியோகம் தடைபட்டு, இறக்குமதி கட்டணம் அதிகரித்துள்ளது. இந்த சூழ்நிலையை சமாளிக்கும் வகையிலும், மத்திய அரசின் நிதி நிலைமையை வலுப்படுத்தும் வகையிலும், ரிசர்வ் வங்கி தற்போது மத்திய அரசுக்கு 2.86 லட்சம் கோடி ரூபாயை வழங்குகிறது. இது கடந்த முறையை காட்டிலும், சுமார் 6.7 சதவிகிதம் அதிகமாகும்.

மும்பையில் நேற்று ரிசர்வ வங்கி ஆளுநர் சஞ்சய் மல்கோத்ரா தலைமையில் நடைபெற்ற ரிசர்வ வங்கியின் மத்திய இயக்குநர்கள் குழுவின் 623ஆவது கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

***அமித் ஷா (10)***

எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் இந்திய தேசிய கொடியை வெற்றிகரமாக ஏற்றிய இந்தோ – திபெத் எல்லை காவல்படையின் பெண்கள் பிரிவிற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மிக கடுமையான நிலப்பரப்பிலும், கடும் தட்ப வெப்ப சூழ்நிலையிலும் இந்த சிறப்பான சாதனையை புரிந்த பெண்கள் மலையேற்றக் குழுவினருக்கு அவர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். இந்தோ – திபெத் காவல் படையினரின் குறிக்கோளான, **தன்னை விட தேசமே பெரியது** என்ற சாதனையை இந்த மலையேற்றக் குழுவினர் நிலைநிறுத்தி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

***குவாட் மாநாடு -1 (4)***

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. மார்க் ரூபியோ, 4 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வந்து சேர்ந்தார். அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர்

இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும். இது குறித்து மேலும் சில தகவல்கள்…

(வாய்ஸ்)

*குவாட் மாநாடு -2 (8)*

(வாய்ஸ்)

இந்தியா – அமெரிக்கா இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம், போன்றவற்றில் ஒத்துழைப்பு குறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

நாளை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசும் அவர், அமெரிக்க தூதரகத்தின் சுதந்திர தின கொண்டாட்டத்திலும் பங்கேற்கிறார். வரும் திங்கட்கிழமை அன்று ஆக்ரா மற்றும் ஜெய்ப்பூர் நகரங்களுக்கு செல்லும் திரு. மார்க் ரூபியோ பின்னர் புதுடெல்லியில் நடைபெறும் குவாட் வெளியுறவு அமைச்சர்கள் உச்சி மாநாட்டிலும் பங்கேற்கிறார்.

*புதுச்சேரி - கூடைப்பந்து (15)*

புதுச்சேரியில், 76ஆவது ஜூனியர் தேசிய கூடைப் பந்து சாம்பியன்ஷிப் போட்டியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இந்திய கூடைப்பந்து சம்மேளனத் தலைவரும், தமிழக அமைச்சருமான திரு. ஆதவ் அர்ஜுனாவுடன் இணைந்து தொடக்கி வைத்தார். இதன் தொடக்க விழா, உப்பளம் ராஜீவ் காந்தி உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் திரு. ரங்கசாமி, புதுச்சேரியில் விமான நிலைய விரிவாக்கத்திற்கான நிலம் கையகப்படுத்த, தமிழக முதலமைச்சர் உறுதுணையாக இருப்பார் என்று நம்பிக்கை தெரிவித்தார். மேலும், புதுச்சேரியைப் பொறுத்தவரை, கல்வி, விளையாட்டு இரண்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் சிறிய மாநிலம் என்றும், விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, அவர்களுக்கு உரிய இட ஒதுக்கீட்டினை வேலைவாய்ப்பு, உயர்கல்வியில் அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். அதற்கான ஊக்கத் தொகையும் அவர்களுக்கு அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

*நிதின் நபின் (8)*

பாஜக தேசியத் தலைவர் திரு. நிதின் நபினின் பிறந்த தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்துத்

தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் விடுத்துள்ள எக்ஸ் தளப் பதவில், திரு. நிதின் நபினின், புதுமையான அணுகுமுறை மற்றும் ஆற்றல்மிக்க தலைமையத்துவம், கட்சிப் பணிகள், நிர்வாகம் போன்றவை அவருக்கு ஆழ்ந்த திறமை இருப்பதை எடுத்துக் காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில், திரு. நிதின்நபின் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதாக பிரதமர் தெரிவித்தார்.

***சிவராஜ் சிங் சவுகான் (7)***

வேளாண் துறையில் திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க செயற்கை நுண்ணறிவு, மின்னணு தொழில்நுட்பம் பெரிதும் உதவிகரமாக இருப்பதாக, மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில், வேளாண்துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், ஊரக வளர்ச்சி நில வள மேலாண்மை ஆகியவை தொடர்பான செயல்திட்டத்தின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

*கிரிக்கெட் (3)*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், இன்று இரவு 7.30 மணிக்கு லக்னோவில் நடைபெறும் ஆட்டத்தில், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி, பஞ்சாப் கிங்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதில், நாட்டின் இளைஞர்கள் முக்கிய பங்காற்றுவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள சைப்ரஸ் அதிபர் திரு. நிக்கோஸ் கிறிஸ்டோ டூடிலஸ் இன்று, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்துப் பேசினார்.

ரிசர்வ் வங்கி, உபரி வருவாய் தொகையாக 2.86 லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசுக்கு வழங்க உள்ளது.

புதுச்சேரியில், 76ஆவது ஜூனியர் தேசிய கூடைப் பந்து சாம்பியன்ஷிப் போட்டியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, தமிழக அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / CN / RK**